Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 21 வெள்ளிக்கிழமை (05.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 17

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## முல்லைத்தீவில் கிபீர்த்தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அலம்பிலில் பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி விமானப்படையின் கிபீர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் 7 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். அலம்பில் 6ஆம் கட்டையில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் குடியிருப்புக்களை நோக்கி நேற்றுக் காலை 7 மணியளவில் கிபீர் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதலில் 7 பொதுமக்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கரையோரப் பகுதி மக்கள் அச்சத்தில் முற்றாக இடம்பெயர்வு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கரையோரப் பிரதேச மக்கள் விமானத் தாக்குதல் அச்சம் காரணமாக அப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. மன்னார், இலுப்பைக் கடவை படகுத்துறை கிராமத்தின் மீது விமானப்படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய கண்மூடித்தனமான விமானத் தாக்குதலில் சுமார் 17 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே இப் பகுதி மக்கள் விமானத் தாக்குதல்கள் தொடரலாம் என்ற அச்சத்தால் இடம் பெயரத் தொடங்கி (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவு. கிளைமோர் சிப்பாய் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் காயடைந்துள்ளனர்.

சிங்கள குடியேற்றத்திட்டப் பகுதியான பிரப்பமடுவில் நேற்றுக் காலை 10.30மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டது, சம்பவத்தில் காயமடைந்த இரு படையினரும் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அநுராதபுரம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ச-5,9)

# இந்தியாவிலிருந்து பொருட்களுடன் மேர்ஜ் றுகுறு கப்பல் யாழ். வந்தது

(சென்னை)

இந்தியாவிலிருந்து தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இந்தியாவுக்கான இலங்கைத் துணைத்தூதுவர் பி.எம்.அம்சா தெரிவித்துள்ளார்.


நேற்று அதிகாலை இந்தியாவிலிருந்து புறப்பட்ட மேர்ஜ் றுகுனு கப்பல் நேற்று மாலை பருத்தித்துறை வந்தடைந்தது. இதேபோன்று பல முறை பொருட்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் படுகாயம்

(பருத்தித்துறை)

வடமராட்சி வதிரி கரவெட்டிப் பகுதியில் நேற்றுக் காலை 9 மணிக்கு குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரின் சூட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த திரவியம் சற்குணம் (வயது 30) என்பரே துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகியுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



இவ்வருடத்தின் முதலாவது போயா தினமான நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மதவழிபாட்டில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## கிளைமோர் குண்டு பொருத்திய ஊர்காவல் படையினர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு இராணுவத்தினருக்கு எதிராக கிளைமோர்க் குண்டுகளை பொருத்தியதாக கூறப்படும் இரண்டு ஊர்காவற்படை

# கண்காணிப்புக் குழுவின் வெளியேற்றம் இணைத் தலைமைக்கு அரசு முறையிடும்

## கெஹலிய ரம்புக்வெல தகவல்

மோதல் இடம் பெறும் பகுதிகளிலிருந்து

மீறுமொரு செயலாகும். இது குறித்து இணைத்

அமைச்சர் மேலும் கூறியதாவது, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வடக்கு

வித்தார்.

## கிளைமோர் குண்டு பொருத்திய ஊர்காவல் படையினர் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு இராணுவத்தினருக்கு எதிராக கிளைமோர்க் குண்டுகளை பொருத்தியதாக கூறப்படும் இரண்டு ஊர்காவற்படை வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று வெலிக்கந்தை பகுதியில் இடம் பெற்றுள்ளது. படையினருக்கு எதிராக கிளைமோர் (04 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுவின் வெளியேற்றம் இணைத் தலைமைக்கு அரசு முறையிடும்

## கெஹலிய ரம்புக்வெல தகவல்

மோதல் இடம் பெறும் பகுதிகளிலிருந்து இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் கண்காணிப்பு நடவடிக்கைகளிலிருந்து முன்னறிவுப்புக்கள் எதுவுமின்றி வெளியேறியுள்ளமை யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறுமொரு செயலாகும். இது குறித்து இணைத் தலைமை நாடுகளிடம் அரசாங்கம் முறைப்பாடு செய்யவுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வடக்கு கிழக்கு பகுதிகளில் இயங்கிவந்த ஏழு அலுவலகங்களை மூடிவிட்டு கடந்த வாரம் கொழும்பு திரும்பியிருந்தனர். கண்காணிப்புக்குழுவினரின் இந்தத் தீர்மான (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க.எம்.பிக்கள் அரசில் இணைவு தர்ம சங்கடத்தில் ரணில்விக்கிரமசிங்க

## கொழும்புச் செய்திகள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணி தலைவர்கள் பலரும் விரைவில் ஐக்கிய முன்னணி அரசில் இணைந்து அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என வெளியாகியிருக்கும் செய்திகள் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பெரும் தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியிருக்கின்றது.

இம் மாதம் இறுதிக்குள் அமைச்சரவையில் மாற்றங்களைச் செய்வதற்கு திட்டமிட்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்விதம் அரசுடன் இணைந்துகொள்ளும் ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளை வழங்குவதற்கும் தயாராக (04 ஆம் பக்கம் பார்க்க)

## மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கப்படும்?

(கொழும்பு)

உலக சந்தையில் மண்ணெண்ணெயின் விலை பாரியளவில் உயர்ந்து சென்றுள்ள நிலையில் இலங்கையில் மண்ணெண்ணை நிவாரண அடிப்படையில் வழங்குவதனால் தாம் மாதமொன்றுக்கு 275 மில்லியன் ரூபா நஷ்டத்திற்கு முகங்கொடுத்து வருவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

# உணவுப்பொருட்களுக்கு வாகரையில் தட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசமான வாகரை பகுதியில் உணவுப் பொருட்களுக்கு பாரிய அளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மற்றும் வாகரை பிரதேசங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் வாகரை மற்றும் கதிரவெளி போன்ற பிரதேசங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுமார் 30 ஆயிரம் பேர் இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச கட்டுப்பாட்டுப் (04 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ தேசிய அடையாள அட்டை வைத்திருப்போர் மீது நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வழங்கிய அடையாள அட்டைகளுடன் வருபவர்களை கைது செய்து பயங்கரவத தடைச் சட்டத்தின் கீழ் துரித சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு படையினருக்கு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பாதுகாப்பு அதிகாரிகள் சந்திப்பொன்று பாதுகாப்பு அமைச்சில்'இடம் பெற்றுள்ள நிலையிலேயே இவ்வறிவித்தல் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்கலைக் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள்

## துணைவேந்தர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளை 22.01.2007 ஆம் திகதி முதல் மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாக துணைவேந்தர் அறிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

இடையூறுகளின் மத்தியிலும் கல்வியைக் கைவிடவோ அன்றி ஒத்திவைக்கவோ எமது மாணவர்களும் பெற்றோரும் எக்காலத்திலும் இடம் கொடுக்கவில்லை.

இப்போதும் மாணவர்களதும் எதிர்கால சந்ததியினரதும் நலன்களைக் கருத்திற் கொண்டும் மாணவர்களாலும் பெற்றோர்களாலும் சமூக நலன்விரும்பிகளாலும் விடுக்கப்பட்டு வந்த ஏகோபித்த வேண்டுகோள்களைக் கருத்திற் கொண்டு மதிப்பளித்தும் கல்விச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இயலுமான அளவு வசதிகள் செய்து கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

### இருப்பிட ஒழுங்குகள்

ஏற்கனவே உள்ள பல்கலைக்கழக விடுதிகளுடன் சில தனியார் கட்டடங்களையும் வாடகைக்குப் பெற்று அவற்றை விடுதிகளாக மாற்றி மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிமாவட்டங்களிலிருந்து கப்பல் மூலம் அழைத்து வரப்படும் மாணவர்களுக்கு அவர்கள் இருப்பிட வசதிக்கு விண்ணப்பித்திருந்தால் அவர்களுக்கு முன்னுரிமையடிப்படையில் இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படும்.

யாழ்.குடாநாட்டின் வடமராட்சி கிழக்கு, தென்மராட்சியின் இனங்காணப்பட்ட சில தூரப் பிரதேசங்கள், தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இயலுமான வரை இருப்பிட வசதி செய்து கொடுக்க முயற்சிக்கப்படும்.

ஏற்கனவே யாழ்.குடாநாட்டில் தங்கியுள்ள வெளிமாவட்ட மாணவர்களை அவர்கள் தற்போது வதியும் இடங்களிலேயே வதியுமாறு ஆலோசனை கூறப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் வதிவிடங்களுக்கு வதிவிட வசதிகளுக்கேற்ப வாடகை நிர்ணயிக்கப்படும்.

### உணவு வழங்கல் ஒழுங்குகள்

பல்கலைக்கழகத்தால் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும் வதிவிடங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு அவர்களது வதிவிடங்களில் அல்லது பல்கலைக்கழக மாணவர் நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகளில் உணவு பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இயலுமான அளவு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இவற்றை ஒழுங்கு செய்து நடைமுறைப் படுத்தப்படும் ஆரம்ப ஒழுங்குகளை மேற்கொள்ள சகல பீடங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கொண்ட குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவனும் குறிப்பிட்டளவு எழுது கருவிகள், காகிதாகிகள் மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்களை கட்டுப் பாட்டு விலையில் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்படும்.

இதற்காக மாணவர் நலன்சேவைகள் பிரிவில் ஒரு விற்பனை நிலையம் இயங்கும். பல்கலைக்கழக மருத்துவ நிலையம் தனது வழமையான சேவைகளை வழங்கும். மருத்துவ நிலையத்திற்கு தேவையான மருந்து வகைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அறிவிக்கப்படும் திகதியில் திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த ஏனைய வெளிமாவட்ட மாணவர்கள் வவுனியா வளாகத்திற்கு வருமாறு அழைக்கப்படுவர்.

அவர்கள் அங்கு தமது பெயர்களைப் பதிவு செய்த பின்னர் அங்கிருந்து பேருந்துகளில் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்படுவர்.

திருகோணமலை மாவட்ட மாணவர்கள் திருகோணமலை நகரின் குறிப்பிட்ட ஒரு இடத்திலிருந்து அழைத்து வரப்படுவர். பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக படைத் தரப்புடன் பேசப்பட்ட போது, கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு படைத்தரப்பினரால் இடையூறு விளைவிக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என துணைவேந்தர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் ஆறாம், ஏழாம் அணி மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு விளையாட்டு விஞ்ஞான அலகு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மேற்படி இரு அணி மாணவர்களையும் தவறாது சமுகந்தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ச)

## கணனிப் பயிற்சி மையம் அங்குரார்ப்பணம்

பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத் தந்தை அருட்பணி பயஸ் இருதயதாஸால் கணனிப் பயிற்சி மையம் ஒன்று புதுவருடத் தினத்தன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அப் பயிற்சி மையத்தில் சுனாமி அனர்த்தம், போர்ச் சூழல் பாதிப்பு மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மாணவர்கள் தமது பயிற்சி நெறியினை மேற்கொள்ளலாம்.

இப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் பயிற்சி நிலைய நிர்வாகியிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ச)

## அதிபர்களுக்கான கூட்டம்

கோப்பாய் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 12 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோப்பாய்க் கோட்டக் கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதில் சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார். (ச–9)

## 6 ஆம் ஆண்டுக்கு அனுமதி

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் தரம் ஆறுக்கான தமிழ், ஆங்கில மொழிகளில் கற்பதற்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன என அதிபர் அறிவித்துள்ளார். (ச)

# கையிருப்பிலுள்ள பொருள்களை வழங்க ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணிப்பு

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருப்பில் வைத்திருக்கும் அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருள்களைத் தமது பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதாக யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

தமக்குத் தேவையான அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருள்களை மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இப்பொருள்கள் விநியோகத்தில் உரிய குடும்பப் பதிவு அட்டைகளில் பதிவுகளைச் செய்த பின்பு ஒரு குடும்பத் தேவைக்கு ஏற்ப விநியோகங்களை மேற்கொள்ள வேண்டும்.

இது தவிர யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட நிலைவரத்தினால் தமது வியாபாரங்களை மேற்கொள்ள வசதியற்றிருக்கும் தனியார் வியாபாரிகளுக்கும் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் இப்பொருள்களை விற்பனை செய்வதற்கும் தமது வியாபார நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள விரும்பும் வியாபாரிகளுக்கும் இப்பொருள்களை விநியோகிக்கப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருப்பிலிருக்கும் மசூர் பருப்பை தனியார் வியாபாரிகளுக்கு விற்பனைக்குக் கொடுப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

அரிசி, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் தேவைப்படும் வியாபாரிகள் உடனடியாகத் தத்தமது பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு உரிய பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஊடாக இப் பொருள்களைப் பெறுக்கொள்ளலாமென அரச அதிபர் க.கணேஷின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# மருந்து வகைகளை எடுத்து வர அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான மருந்து வகைகளை உடனடியாகக் கொண்டு வருவதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச மருந்துக் கூட்டுஸ்தாபனத்தில் (ஒசுசல) இருந்து எதிர்வரும் 6 மாத காலத்திற்கு யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான மருந்து வகைகளை உடன் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் தேவையான மருந்து வகைகளின் பட்டியலை உடன் தயாரிக்குமாறு நேற்று யாழ். அரச அதிபருக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் கூறப்பட்டது.

இவ்வாறு உடனடியாகக் கொண்டு வரப்படுகின்ற மருந்து வகைகள் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும் தனியார் மருந்தகங்களின் மூலமும் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஏ)

# முன்னாள் ஜனாதிபதியால் தாமதமாகிய விமானம்



(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விமான நிலையத்திற்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகமளிக்காததால் மாலைதீவு செல்லவிருந்த விமானமொன்று ஒரு மணி நேரம் தாமதமாகிப் பயணத்தை ஆரம்பித்தது.

கடந்த 2 ஆம்திகதி மாலைதீவு செல்லவிருந்த ஏயார் சஹாரா விமானத்தில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் பயணம் செய்ய ரிக்கட் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அன்றைய தினம் பிற்பகல் 2.15 மணிக்கு விமானம் புறப்பட ஆயத்தமாகியிருந்த போதிலும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 3.20 மணிக்கே விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

சந்திரிகா விமான நிலையத்திற்கு சமுகமளித்ததன் பின்னர் சுமார் ஒரு மணி நேரம் தாமதமாகிய நிலையில் விமானம் பயணத்தை ஆரம்பித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச–5)

## வெலிகந்தையில் கிளைமோர் மீட்பு

வெலிகந்த பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட சேனபுர கட்டுவன்வில பிரதேசத்தில் வீடொன்றில் நடத்தப்பட்ட தேடுதலின் போது இரண்டு கிளைமோர்க் குண்டுகளை தாம் மீட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளதாகவும் வெலிகந்தப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தமக்குக் கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் தாம் இத் தேடுதலை நடத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சேனபுர கட்டுவன்வில பிரதேசத்தில் உள்ள பொலிஸ் காவலரண் ஒன்றிற்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றிலிருந்தே இக் கிளைமோர்க் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் இக் காவலரணில் கடமையில் ஈடுபடும் பொலிஸாரை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துவதற்காக இவை கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தனர். (எ–5)

## சிக்கின்குனியா மருத்துவ முகாம்

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணிக்கு சிக்கின்குனியா மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

விசேட மருத்துவர் குழுவினரால் பரிசோதிக்கப்பட்டு நோய் உள்ளவர்களுக்கு மருந்துக்ளும் வழங்கப்படும். ஒவ்வொரு சனிக்கிழமையும் இம் மருத்துவ முகாம் காலை 10 மணிக்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (ச)

சிறுவிளம்பரம்

திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன் கண்ணாடி திருத்துதல் முதலிய வேலைகள் திறம்படச் செய்து கொடுக்கப்படும். *சு.நாராயணசாமி*, கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் (மேல்மாடி) யாழ்ப்பாணம். (716)

# கனியவளம் தொடர்பாக மன்னார் வளைகுடாவில் ஆய்வு

இந்தியாவின் எரிபொருள் நிறுவனமொன்று மன்னார் வளைகுடாவில் கனியவளம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் எண்ணெய் மற்றும் எரிபொருள் கூட்டுஸ்தாபனமான விதேஸ் நிறுவனம் இதனை மேற்கொள்ளவுள்ளது. தமது நிறுவனத்தின் எண்ணெய் வள ஆய்வுகள் குறித்து அனுபவங்களை அயல் நாடான இலங்கையுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளதாக விதேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே 1960 ஆம் ஆண்டு சோவியத் யூனியன் மன்னார்ப் பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொண்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை.

எனினும் தற்போதைய தொழில் நுட்ப வசதிகளுக்கு அமைய ஆய்வுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே றோர்லே இலங்கையின் மேற்குப் புறக் கடற்பரப்பில் கனிய எண்ணெய் வளம் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாகவும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ச–9)

## கடற்படைக்கு 6 பீரங்கிப் படகுகள்

கடற்படைக்கு ஜனாதிபதி ஆறு அதிவேக பீரங்கிப் படகுகளை வாங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கடற்படையின் மனோபலம்குன்றி விடுதலைப்புலிகளுடனான சமர்களில் ஈடுகொடுக்க முடியாமல் உள்ளனர்.

எனவே கடற்படையின் மனவலிமையை அதிகரிக்கும் முகமாக ஜனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகள் அமைந்து வருவதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

உண்மையைச் சொல்வதுதான் உலகிலேயே மிகப் பெரிய நகைச்சுவை.

-பெர்னார்ட்ஷா

வலம்புரி

# சட்டமாக்கப்பட வேண்டிய ஊடக ஒழுக்க நெறி

ஜனநாயகத்தைக் காப்பாற்றும் நான்கு தூண்களில் ஊடகமும் ஒன்றாகும். ஊடகத் துறையின் பூரண சுதந்திரமும் அதன் பக்கச்சார்பற்ற தகவல் தருகையும் நீதியையும், நேர்மையையும் பாதுகாக்க உதவும்.

அரசாட்சிகள் கவிழ்ந்து போனதும், ஊழல் மோசடிகள் அம்பலமானதும், ஊடகத்துறையின் அர்ப்பணிப்புடனான சேவையினால் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகும்.

எனினும் துரதிஷ்டவசமாக சில ஊடகங்கள் நியாயத்தை-உண்மையை-யதார்த்தத்தை வெளியிடுவதில் காட்டும் தயக்கம் அல்லது பக்கச்சார்பு ஜனநாயகத்தின் இருப்பைப் பாதிப்பதாக இருப்பதுடன், ஏழைகளின் வயிற்றில் அடிப்பதாகவும் உள்ளது.

இதன் விளைவு பாரதூரமானது என்ற செய்தியுடன் ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறி பற்றிப் பிரஸ்தாபிப்பது இவ்விடத்தில் பொருத்துடையதாகவிருக்கும்.

அதாவது ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கநெறி பற்றி சில அரச சார்பற்ற அமைப்புக்கள் முனைப்புடன் செயலாற்றி வந்தாலும் அதனை எல்லா ஊடகங்களுமே கடைப்பிடிப்பதாக இல்லை.

அநேகமான ஊடகங்கள் பொறுப்பற்ற முறையில் செயலாற்றுவதுடன், நாட்டில் வன்செயல்களைத் தூண்டிவிடும் வகையிலும் செயற்படுகின்றன.

குறிப்பாக உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவதில் தென்னிலங்கையில் உள்ள சில ஊடகங்கள் முனைப்புக் காட்டுகின்றன.

இவை வன்செயலை-இனத்திற்கு எதிரான தகவல் வெளியிடுகை தொடர்பான ஒழுக்கநெறி மீறலாகும்.

இவை எல்லாம் சட்டத்தின் முன் தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனப்படுத்தப்படும் பொழுதே அதனைத் தடுக்க முடியும் என்பது பலரது கருத்து.

இதற்கு அப்பால் கோரமான-மனித மனங்களால் ஜீரணிக்க முடியாத செய்திகளை-புகைப் படங்களை-வீடியோக் காட்சிகளைக் காண்பித்தும் அநாகரிகம் தவிர்க்கப்படுவது ஊடகங்கள் கடைப்பிடிக்கவேண்டிய சட்ட ரீதியான ஒழுக்கநெறியாக முன்மொழியப்படுவது அவசியமாகும்.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனைத் தூக்கிலிடும் காட்சி தொடர்ச்சியாகத் தொலைக் காட்சிகளில் காண்பிக்கப்பட்டது.

இதனைப் பார்த்த லட்சக் கணக்கான மக்கள், அதனை ஜீரணிக்க முடியாதவர்களாகக் கணப்பட்டதுடன், அதனால் உள ரீதியான பாதிப்புக்களையும்-உபாதைகளையும் அனுபவத்தின்,

மேற்படி காட்சியைப் பார்த்த பாகிஸ்தான் நாட்டுச் சிறுவன் ஒருவன் தானும் அதேபோல் தூக்கில் தொங்கி மாண்டுபோனான்.

இந்தத் துயரச் சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் சதாம் ஹுசைனைத் தூக்கிலிடும் காட்சியை ஒளிபரப்பிய அத்தனை ஊடகங்களும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

ஊடகங்களின் இத்தகைய பொறுப்பற்ற செயல்கள் மனித மனங்களில் வக்கிர உணர்வை விதைத்து விடும் என்ற உண்மையை ஊடகத்துறையினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சதாம் ஹுசைனின் தூக்கைப் பார்த்த சிறுவன் அதேபோல் தானும் தூக்குக் கயிற்றை தன் கழுத்தில் மாட்டிக் கொண்டு மாண்டதுபோல், தொலைக் காட்சிகளில் வருகின்ற ஏனைய விளம்பரங்கள், செய்திகளுக்கான காட்சிகள் சிறுவர்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை விளைவிக்கின்றன.

எனவே ஊடகத்துறை ஒழுக்கநெறி என்பது சட்ட அந்தஸ்தைப் பெறுகின்றபோதே ஊடகங்களின் பொறுப்பற்ற செயலை தடுக்கவும்-தவிர்க்கவும் முடியும்.

அதிலும் இலத்திரனியல் ஊடகங்களின் ஒழுக்கவியல் கோட்பாட்டில் சட்டரீதியான அதிகாரங்களின் தேவைப்பாடு தினமும் வலியுறுத்தப்படுவதாகவேயிருக்கின்றது.

# 3 ஆயிரம் மெ.தொ.பொருள்களுடன் பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்

## இறக்கும் பணிகள் ஆரம்பம்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான 3 ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்கள் நேற்று மாலை பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கப்பலில் பருப்பு, சீனி, மிளகாய், கடுகு, பெருஞ்சீரகம், நச்சீரகம், உப்பு, புளி, மல்லி, அவல், சக்கரை, மஞ்சள், உருளைக்கிழங்கு ஆகிய உணவுப் பொருள்கள் எடுத்துவரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியா சென்றிருந்த போது மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு இணங்க இப்பொருள்களை இலங்கை அரசாங்கம் இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்துள்ளதாக சமூக சேவைகள் அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்ட மக்களுக்கு பொங்கலுக்கான பச்சையரிசி, சக்கரை, பயறு போன்றவற்றை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அடுத்த வாரம் வழங்க யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொங்கலுக்கான பொருள்கள் கப்பலில் எடுத்துவரப்படுவதனால் அவை துறைமுகத்தில் வைத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளன. குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கு அமைவாக அவை விநியோகிக்கப்படவிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ச-3)

# இந்திய எதிர்க் கட்சிகளுடன் மன்மோகன் சிங் சந்திப்பு

## இலங்கை விவகாரம் குறித்துப் பேச்சு

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இந்திய எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் லால் கிருஷ்ண அத்வானி, முன்னாள் பிரதமர் அடல் பியாரி வாஜ்பாய், ஜஸ்வந்சிங், முன்னாள் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிர்ஜேஸ் மிஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

அத்துடன் இந்தியப் பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன், இந்தியப் பிரதமரின் தலைமை செயலாளர் டி.கே.ஏ.நாயர், வெளிவிவகாரச் செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அயல் நாடுகளான பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் தொடர்பாக கலந்துரையாடும் நோக்கில் இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது எதிர்க் கட்சியினரின் ஆலோசனைகளையும் யோசனைகளை இந்தியப் பிரதமர் பகிர்ந்து கொண்டுள்ளதாக இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது. இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் 8 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்கள் குறித்து அவர் அரசாங்கத் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)

# சமுர்த்தி வங்கியில் 96 லட்சம் மோசடி

(கொழும்பு)

நுவரெலியாவிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் உட்பட 19 பேர் உடனடியாக பணிநீக்கம் செய்யப்பட்டதையடுத்து அந்த வங்கி சீல் வைக்கப்பட்டுள்ளது.

1900 வாடிக்கையாளர்களைக் கொண்ட நுவரெலிய சமுர்த்தி அபிவிருத்தி வங்கியில் 96 லட்சம் ரூபா பணமோசடி இடம்பெற்றிருப்பது தெரியவந்ததையடுத்து சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் அது சீல் வைக்கப்பட்டுள்ளது.

இந்தமோசடியில் வங்கியின் முகாமையாளர் உட்பட 19 பேர் தொடர்புபடுத்தப்பட்டுள்ளனர் என செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தச் சீல் வைப்பு சம்பவத்தையடுத்து வங்கியை தீ மூட்ட முயற்சித்த இளைஞர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வங்கியிலுள்ள ஆவணங்களை தீக்கிரையாக்கும் நோக்குடனேயே வங்கியை தீ மூட்ட இவர் முயற்சித்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தேர்ச்சி பெற்ற கணக்காளர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# சட்டுநாயக்கா ஊடாக 5 கோடி ரூபா நாணயத்தாள் கடத்தல்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக நாளொன்றுக்கு 5 கோடி ரூபா வெளிநாட்டு நாணயத்தாள் கடத்தப்பட்டு வருவதாக சுங்கத் திணைக்கள ஆணையாளர் ஜெனரல் சரத் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த சரத் ஜயதிலக்க இவ்விடயத்தை அவரிடம் கூறியுள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதியிடம் அவர் மேலும் கூறியுள்ளதாவது;

கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக நாளொன்றுக்கு 5 கோடி ரூபா வெளிநாட்டு நாணயத்தாள்கள் சட்டவிரோதமான முறையில் கடத்தப்படுகின்றது. இந்த நடவடிக்கைக்கு விமான நிலையத்தில் பாதுகாப்புக் கடமையிலிருக்கும் 90 வீதமானவர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள்.

இந்தியப் பிரஜைகளைக் கொண்டே இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகமாக இடம்பெறுகின்றன. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை தொழில் நுட்ப ரீதியாக முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ச)

# கோத்தபாய மீதான தாக்குதல் விசாரணையில் இளைஞன் கைது

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்திய நபருக்கு ஒத்துழைப்பு வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவரை இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொம்பனி வீதியைச் சேர்ந்த இந்த இளைஞர் தற்கொலைக் குண்டுதாரியைப் பயன்படுத்தி முச்சக்கர வண்டியை அப்பகுதியில் மறைவான இடத்தில் வைத்திருக்க ஒத்துழைப்பு வழங்கினார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் இரகசியப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-1)

# 829 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

இலங்கையில் கடந்த ஆண்டில் மட்டும் 829 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொழும்பு எயிட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பலர் பாலியல் நடவடிக்கையினால் எயிட்ஸ் நோய்க்குள்ளாகியுள்ளனர் என அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதோடு எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருந்த தாய்மார் பெற்ற 20 பிள்ளைகள் எயிட்ஸ் தொற்று காரணமாக கடந்த வருடத்தில் மரணமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறக்கும்போதே எயிட்ஸ் தொற்றுடன் பிறந்த ஆறு குழந்தைகள் தற்போது எயிட்ஸ் நோய் தடுப்பு பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் நாட்டில் தற்போது சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிகமான எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் இவர்களில் சுமார் 700 பேருக்கு எச்.ஐ.வி.உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக எயிட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-5)

# சிக்கின்குனியா ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

சிக்கின்குனியா மற்றும் வைரஸ் காய்ச்சல் ஏற்படுத்தும் பாதிப்புக்களும் அதன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைச் செயற்பாடுகளும் குறித்த ஆய்வரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் முற்பகல் 11 மணிவரையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆரம்ப உரையினை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் நிகழ்த்துவார். கருத்துரைகளை உலக சுகாதார நிறுவன ஆலோசகர், சமுதாய மருத்துவ நிபுணர் வைத்தியகலாநிதி என்.சிவராசாவும் மார்பு நோய் வைத்தியஅதிகாரி வைத்தியகலாநிதி சி.எஸ்.யமுனாநந்தா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் உயர் தர மாணவர்கள் கலந்து கொண்டு சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

## உதவுமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை

கிளிநொச்சி வைத்திய சாலையில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது கைவசம் உள்ள அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் தீர்ந்து போகும் நிலையில் உள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நீரிழிவு நோய், வலிப்பு நோய், குருதி அழுத்தம் ,தொண்டைக்கழலை ,மனநோய் போன்றவற்றுக்கான மருந்து வகைகள் மற்றும் சத்திர சிகிச்சைக்கான மயக்க மருந்துகள், காயங்களுக்கான கட்டுத் துணிகள் , மகப்பேற்றுக்கான மருந்துகள் உட்பட பல மருந்துகளுக்கான தட்டுப்பாடுகள் நிலவுவதாக வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நோய்களுக்கான பிராண வாயு கொல்கலன்கள் நேற்றுடன் முடிவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. முடிவடைந்த பிராணவாயு கொல்கலன்கள் வவுனியாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதில் உள்ள தாமதம் காரணமாக கொண்டு செல்ல முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கு வழங்கப்பட வேண்டிய மருந்துப் பொருட்களில் 50 சதவீதம் மாத்திரமே கடந்த வருடத்தில் வழங்கப்பட்டதாக மருந்துவமனையின் மருந்தாளர் தெரிவித்துள்ளார்.

மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ள நிலையில் சிகிச்சைக்கான தேவைகள் அதிகரித்துள்ளது. வைத்தியசாலையில் நிலவும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய உதவுமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் கடந்த மூன்று மாதங்களாக கூறிவருவதாகவும் கிளிநொச்சி வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். எனினும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் காரணமாக இந்த சர்வதேச அமைப்புக்களால் மருந்துப் பொருட்களை அனுப்ப முடியாது போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3,9)

## மண்ணெண்ணெய்...

மக்களின் அத்தியாவசிய தேவைப் பொருட்களில் ஒன்றான மண்ணெண்ணெய் உலக சந்தையில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. எனினும் மக்களின் நலன் கருதி இலங்கையில் இந்த விலையை உயர்ந்ததனால் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் பாரிய நஷ்டத்திற்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதனால் மண்ணெண்ணெய் விலையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

(ச-5)

# மூன்று இளைஞர்களை காணவில்லை என மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று முன்தினம் முதல் மூன்று இளைஞர் கடத்தப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொக்குவில் கிழக்குப் பகுதியை சேர்ந்த யாழ்.பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன் அருணகிரிநாதன் கிருபைராஜா நேற்று முன்தினம் காணாமற் போயுள்ளதாகவும் கொக்குவில் மேற்கு பகுதியில் வைத்து ரவீந்திரநாத் ரஜீந்தன் என்பவரும் செம்மணி வீதி நாயன்மார் கட்டு பகுதியில் வைத்து துரைசிங்கம் பால்ராஜ் ஆகிய இருவரும் வாகனத்தில் வந்தோரினால் கடத்தி செல்லப்பட்டதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்தது. (எ-3)

# பாடசாலை மாணவன் வாழைச்சேனையில் கடத்தல்

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேத்தாளையில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் பாடசாலை மாணவன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று காலை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேத்தாளை விபுலானந்தா வித்தியாலயத்தில் தரம் 10ல் கல்வி கற்கும் சீவன்கோயில் வீதியைச் சேர்ந்த தவநாயகம் தர்சன் (வயது 14) என்பவரே கடத்திச் செல்லப்பட்டவராவார்.

புதன்கிழமை மாலை தனிப்பட்ட தேவை ஒன்றின் நிமித்தம் சென்று கொண்டிருந்த வேளை பேத்தாளை ரமணன் சந்திக்கு அருகிலுள்ள கடையொன்றின் அருகில் வைத்து இவர் கடத்தப்பட்டுள்ளார்.

இக் கடத்தல் தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தமிழீழ தேசிய அடையாள...

வழங்கப்பட்டுள்ளது. கடந்த முதலாம் திகதி விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு தமிழீழ தேசிய அடையாள அட்டை களை வழங்கும் பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளனர்.

அடையாளமாக புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு முதலாவது தமிழீழ தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளமை அரசாங்கத்திற்கு தெரிய வந்ததையடுத்தே படைகளுக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத இயக்கமொன்று மக்களுக்கு தேசிய அடையாள அட்டையொன்றை தயாரித்து பாவனைக்கு வழங்குவது சட்டவிரோதமானதாகும். அதேவேளை அவர்கள் ஸ்தாபித்துள்ளதாக கூறப்படும் அடையாள அட்டை திணைக்களம் ஒரு சட்டவிரோத பணியகமாகும்.

நாட்டு மக்களை அடையாளப்படுத்த அரசாங்கத்தினால் தேசிய அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. அதுவே செல்லுபடியாகும். போலி மற்றும் சட்ட விரோத ஆவணங்கள் செல்லு படியற்றதாகும். அதனை தம்வசம் வைத்திருப்பது தேசத்துரோக குற்றமாக ஏற்றுக் கொள்ளப்படும்.

அரச படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு இச் சட்ட விரோத அடையாள அட்டைகளுடன் வருவது மோசமான குற்றச் செயலாகும். யாரேனும் புலிகள் வழங்கும் குறிப்பிட்ட அந்த அடையாள அட்டைகளுடன் வந்து பிடிபடும் பட்சத்தில் அவர்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## உணவுப்பொருட்களுக்கு...

பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இருப்பினும் தற்போது வாகரை மற்றும் கதிரவெளி போன்ற பிரதேசங்களில் தொடர்ச்சியாக தங்கியுள்ள சுமார் 15 ஆயிரம் பேர் உணவுப் பொருட்கள் இன்றி பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு வாகரை பிரதேசத்திற்கான பாதைகள் மூடப்பட்டு போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்படுவதால் மட்டக்களப்பு அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து உணவுப் பொருட்களைக் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை ஏறப்பட்டுள்ளதால் நாளந்தம் வாகரை மற்றும் கதிரவெளி பிரதேசத்தில் வாழும் 15 ஆயிரம் மக்கள் பருப்பை மாத்திரம் கறி சமைப்பதற்காக பாவிக்க வேண்டியுள்ளதாக அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பிரதேசங்களில் மீன், இறைச்சி, மரக்கறி மற்றும் சத்துணவுப் பொருட்களும் கிடைப்பதில்லை எனவும் தெரிவிக்கின்றனர். (ச)

## ஐ.தே.க.எம்.பிக்கள்...

விருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னணித் தலைவர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட உட்பட சுமார் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வது தொடர்பில் அரசாங்கப் பிரதிநிதிகளுடன் இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு இணைந்து கொள்வோருக்கு இம் மாத இறுதியில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றத்தின் போது முக்கிய அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கு மகிந்த உறுதியளித்திருப்பதாகவும் தெரிய வந்திருக்கின்றது. குறிப்பிட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது அமைச்சர்களின் எண்ணிக்கை 35 ஆகக் குறைக்கப்படுவதுடன் பலர் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்து சமாதானப் பேச்சுக்களிலும் முக்கியமாகக் கலந்துகொண்ட பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் மிலிந்த மொறகொட ஆகியோர் அரசுடன் இணைந்துகொண்டால் அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் பின்னடைவாக இருக்கும் எனக் கருதப்படுகின்றது.

இது ஐக்கிய தேசியக் கட்சி தலைமைக்கு ஒரு பெரும் நெருக்கடியைக் கொடுத்த காரணத்தினால்தான் ஜனாதிபதி உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை தமது பக்கத்துக்கு அரசாங்கம் இழுத்துக்கொள்ளக் கூடாது என்ற சரத்தையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற பதில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமை அக்கறை காட்டிய போதிலும் மகிந்த அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

முக்கிய விடயங்களில் அரசுக்கு ஆதரவளிப்பதென இந்த உடன்படிக்கையின் மூலம் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்த பின்னரும் இவ்விதம் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் தன்பக்கம் இழுத்துக் கொள்வது ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக்குப் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என கூறப்படுகின்றது. (ச)

## முல்லைத்தீவில்...

காயமடைந்துள்ளனர். இதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். மேலும் இத் தாக்கு தலில் பொது மக்களின் வீடுகள் பலவும் சேதமடைந்துள்ளன.

மரியநாயகம் நேசமணி (வயது 61) ,முத்துராசா மோசீஸ் (வயது 09) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் முல் லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்றுக் காலை மேற்கொள்ளபட்ட விமான குண்டுத் தாக்குதலில் அலம்பில் மற்றும் முல்லைத்தீ விலுள்ள கடற் புலிகளின் முகாம்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

(ச-3,5,9)

## மன்னார் கரையோரப்...

யுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

முற்று முழுதாக கடற்தொழிலாளர்களையே கொண்டுள்ள இந்தக் கிராமத்தின் மீதான தாக்குதலின் பின்னர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கரையோரப் பகுதிகளில் வசிக் கும் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் மன்னார் முசலி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்குப்படையான் கரையோரக்கிராமத்தைச் சேர்ந்த அனைத்து மக்களும் நேற்று முன்தினம் புதன்கிழமை அங்கிருந்து இடம் பெயர்ந்திருக்கின்றனர். இதனால் அக்கிராமம் வெறிச்சோடிக் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## கிளைமோர்...

குண்டுகளைப் பொருத்து வதற்காக தாம் பணம் பெற்றுக் கொண்டமை யை இந்த இரு ஊர்காவற்படையினரும் ஏற்றுக் கொண்டதாக படைத்தரப்பினர் தெரிவித் துள்ளனர். இது குறித்து இராணுவம் விசார ணைகளை மேற்கொண்டுள்ளது. (எ-3)

## சூட்டுக்கு...

மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9,52)

## கண்காணிப்புக்...

மானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். அதேநேரம் யுத்த நிறுத்த உடன்படிக்கை மூலம் கண்காணிப்புக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை மீறுவதாகவும் இச் செயல் அமைந்துள்ளது.

கண்காணிப்புக்குழுவினர் ஏதேனும் சிரமங்களுக்கு முகம்கொடுத்து வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றத் தீர்மானிக்கும் போது அதுபற்றி குறைந்த பட்சம் அரசாங்க சமாதான செயலகத்திற்காவது அறிவித்திருக்கலாம். எனினும் அக்குழு தனது பொறுப்புக்களிலிருந்து திடீரென வெளியேறியிருக்கிறது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தனது கண்காணிப்பு நடவடிக்கையிலிருந்து இவ்வாறாக வெளியேறியுள்ளமையானது குறித்த பகுதிகளில் புலிகள் சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையை இலகுபடுத்திக் கொடுத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

நாளை ஆரம்பம்
A/L - 2009
(கலை,வர்த்தகப் பிரிவுகள்)
காலை-8.30
DMI Jaffna
(C-377)

# இந்தியாவிலிருந்து பொருட்களுடன்...

சென்னையிலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு நேற்று அதிகாலை மேர்ஜ் றுகுணு கப்பல் புறப்பட்டு பருத்தித்துறை துறை முகத்தை வந்தடைந்தது.

இதில் 200 மெற்றிக் தொன் சக்கரை, 150 மெற்றிக் தொன் மிளகாய் ,100 மெற்றிக் தொன் அவல் உட்பட 2675 மெ.தொன் பொருட்களே நேற்று வந்தடைந்தது.

தனியார் விற்பனையாளர்களிடம் இருந்து கேள்வி அடிப்படையில் இலங்கை கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் மூலமாக இக் கொள்வனவு செய்யப்பட்டன.

இதேபோன்று தொடர்ச்சியாக பொருட்களை அனுப்புவது என்பது தற்போதைய நிலையில் பொருத்தமானது என துணைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

பொருட்களை பருத்தித்துறைக்கு ஏற்றி இறக்குவது சுமூகமாக இடம் பெற்றால் தொடர்ச்சியாக பொருட்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் செல்வதற்கு 60 மணித்தியாலங்கள் எடுக்கும். அதனால் இந்தியாலிருந்து செல்வதனால் 18 மணி நேரத்திற்குள் யாழ்ப்பாணத்தை சென்றடையும் என அவர் கூறினார்.

இதைவிட சென்னையிலிருந்து பொருட்கள் கொழும்புக்கு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு செல்வதனால் நீண்ட நாட்கள் எடுப்பதுடன் பொருட்களின் விலைகளிலும் பாரிய மாற்றம் ஏற்படும்.

ஆனால் இந்தியாவிலிருந்து நேரடியாக வரும் போது விலையில் மாற்றம் சிறிதாகவே ஏற்படும் என்றார். இதேவேளை கப்பலுக்கான பாதுகாப்புப் பூரணமாக இருக்கும் எனவும் அவர் கூறினார்.

(ச)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.